**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.210/2024**
**வழக்கு சாட்சி PW-12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | ஹோட்டல் |
| கிராமம் | : | கருத்தானூர் | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கருத்தானூரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் ேஹாட்டலில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. சாட்சிகள் வெங்கடேஷ், கவிக்குயில் ஆகியோர்களை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 26.08.2023ம் தேதி, பகல் 01.00 மணியளவில் கீழக்கலங்கல் சிவந்தி ஆதித்தனார் மண்டபம் எதிரேயுள்ள கவிக்குயில் என்பவரது வீட்டிற்கு வந்தோம் என்றும், அப்போது அங்கு சாட்சி வெங்கடேஷை ஒரு மாமரத்தில் கட்டி வைத்திருந்தார்கள் என்றும், எதிரிகளான அன்பரசன், கனகராஜ், நடராஜன் ஆகியோர்கள் அரிவாளுடனும், எதிரி முத்துமாரியும் அங்கு இருந்தார்

என்றும், சாட்சி வெங்கடேஷை சந்தேகப்பட்டு மாமரத்தில் கட்டி வைத்து, கெட்ட வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், எதிரி அன்பரசன் வெங்கடேஷின் இடதுபக்க கழுத்தை நோக்கி வெட்டினார் என்றும், அதை அவரது இடது கையால் தடுத்த போது, இடது கை பெருவிரல், ஆள்காட்டி விரல், நடுவிரல் ஆகியவை துண்டானது என்றும், மீண்டும் அன்பரசு அரிவாளால் வெங்கடேஷின் இடது கை மணிக்கட்டில் வெட்டி, இடது கை மணிக்கட்டு துண்டாக போனது என்றும், வெங்கடேஷின் இடது கண்ணில் வெட்டி பலத்த காயம் ஏற்பட்டது என்றும், எதிரி நடராஜன் அரிவாளால் வலது பக்க தோள்பட்டையில் வெட்டி காயப்படுத்தினார் என்றும், சம்பவத்தை பார்த்த நாங்கள் தடுக்க முற்பட்ட போது, கொன்று விடுவதாக மிரட்டினார்கள் என்றும், காயம்பட்ட வெங்கடேஷை கட்டி வைத்திருந்த கயிற்றிலிருந்து விடுவித்து தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:49:40 +0530